# கண்ணீர் அஞ்சலி



முன்னாள் ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகப் பிரதிநிதி - பெரம்பூர் பகுதிக் கழகப் பிரதிநிதி

திராவிட இயக்க தீரர்

## திரு. K.வளவன் அவர்கள்

தோற்றம் : 16.04.1937 மறைவு : 08.06.2026 வயது : 89

( 08.06.2026, திங்கட்கிழமை அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். )

அவர்களின் இறுதி சடங்குகள் ( 10.06.2026 ) புதன்கிழமை, மாலை 4.00 மணியளவில் எண்.161/88, பி.பி.ரோடு, வியாசர்பாடி, ( பெரம்பூர் பேருந்து நிலையம் அருகில் ) சென்னை - 600 039. உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

திருவுருவ உடல் பார்வைக்கு 09.06.2026, செவ்வாய்கிழமை, மாலை 6 மணிமுதல் 10.06.2026, புதன்கிழமை, பிற்பகல் 3 மணிவரை வைக்கப்படும். தொடர்புக்கு : 98401 75381 / 9840656672

ஆழ்ந்த வருத்தத்துடன்...

நீலகண்டன் வளவன் B.E., Washington, D.C. USA ◉ மேகநாதன் வளவன் B.E., CA, USA

திருமதி வளவன் யமுனாதேவி M.L., மு.சிறப்பு அரசு வழக்கறிஞர் ◉ ஜெய்சங்கர் வளவன் B.E., CA, USA

மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள்



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மேற்கு பகுதி 4வது வட்டம் எர்ணாவூர் பகுதியில் வசிக்கும் எஸ். மாறன் எஸ்.குமரன் ஆகியோரின் தந்தை கழகத்தின் தீரா பற்றாளர் பி.எஸ்.மணி இயற்கை எய்தினார். அவரது உடலுக்கு சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார். க.சோழன், தில்லை செல்வராஜ், அன்பரசன், பார்த்திபன், ப.சங்கர், கே.வெங்கட், செ.ஜேம்ஸ், ஹரீஷ், மாதவன், ஐசக், மற்றும் கழக உடன்பிறப்புகள், இளைஞர் அணி தோழர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.



முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் தொகுதி சேலை கிராமத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.ஜி. ராஜேந்திரன், கலந்துகொண்டு கலைஞர் அவர்களின் திருவுருவ படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு இனிப்புகள் வழங்கினார் உடன் கழக நிர்வாகிகள் முரளி, வேதாச்சலம், சுப்ரமணி, தினகரன், அறிவழகன், அஜய், ராமதாஸ், மோகன், தேவனேசன், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

### வழக்கறிஞர் பி.வின்சென்ட் தலைமையில்

# கலைஞர் பிறந்த நாள் 500 பேருக்கு அறுசுவை உணவு - மகளிர்க்கு நல உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை ஜூன்:10

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்டம் 61வது வட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர் பி. வின்செண்ட் தலைமையில் 500 பேருக்கு அறுசுவை உணவும், 300 மகளிர்க்கு புடவையும் வழங்கப்படுகிறது.

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்கு பகுதி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு,நாளை 11. 6.2026 வியாழக்கிழமை மதியம் 12 மணியளவில் வீராசாமி தெரு எழும்பூரில் 500 பேருக்கு அறுசுவை விருந்து மற்றும் 300 மகளிர்க்கு புடவை வழங்கும் விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு 61வது வட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர் பி. வின்செண்ட் தலைமை வகிக்கிறார்.

விழாவில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு 500 பேருக்கு அறுசுவை உணவு மகளிர்க்கு நலத் திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இதில் மேயர் பிரியா ராஜன், விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி, கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன், எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர்,வட்டக் கழக செயலாளர் டால்பின் எஸ். ஹரி,

தெற்கு,வடக்கு பகுதி நிர்வாகிகள்; எஸ். ரசூல்,டி. வி.வேலு, எம்.மலர்தாறன்,கே. அன்னபூரணி,எஸ். ஜெகதீசன், பா. கௌதம், ஆர். குமார், சி. பூங்கொடி, சி. சீனிவாசன்,எம். ராமச்சந்திரன்,டி. இசக்கியல், இன்பநாதன்,வி. பார்த்திபன்,ஜே. இஸ்மாயில்,வி.ஆர். சாந்தகுமார்,

எம்.இராமச்சந்திரன், எஸ்.கே. செந்தில்குமார்,வி. ராஜேஷ், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் எல். எட்வின் உள்ளிட்ட மாநில,மாவட்ட, பகுதி நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் பாக முகவர்கள் கலந்து கொள்கின்றனர்.




திருவள்ளூர் இந்திரா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவ மனையில் உலக குருதி நன்கொடையாளர் தின விழா கொண்டாடப்பட்டது. ஏராளமானோர் குருதி தானம் செய்தனர். நிகழ்ச்சியில் கல்லூரி நிர்வாக இயக்குனர் திருமதி. இந்திரா ராஜேந்திரன் அவர்கள் பங்கேற்று நன்கொடையாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் ஊட்டச்சத்து வகைகள் வழங்கி வாழ்த்தினார். உடன் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் உள்ளிட்ட பேராசிரியர்கள், மருத்துவர்கள் பங்கேற்றனர்.




சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் அறிவுறுத்தலின்படி ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 40வது வட்டத்தில் ஆதி திராவிடர் நலக்குழு சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஊடகம் கு. ராஜ்குமார் தலைமையில் நா.கோதண்டன் முன்னிலையில் மதிய உணவு சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே. எபினேசர், பகுதி செயலாளர் இரா. லட்சுமணன், ஆகியோர் வழங்கினர். ஆர்.வெற்றிவீரன், வெ.சு. சத்யநாராயணன், ஆர்.டி.ராஜா, கே.பி. சதீஷ்குமார், ச. தமிழ்செல்வன், பொ.து.ராஜா, எஸ்.எம். ரவிச்சந்திரன், எம்.எம்.சாமி, டி.ஆர். தணிகாசலம், கே.மோகன், வி.முத்து, பி.அன்பு, என்.பிரேமராஜன், ப.ஆ.சண்முகம், கோ. யோகேஸ்வரன், பி. வைத்தீஸ்வரன், ஆர். கிருஷ்ணன், டி.கணேசன், கோ.தமிழ்ச்செல்வன், இரா.சீமான், எம்.எஸ்.ரவி, ஆர்.வெங்கட், ஆர். பத்மநாபன், என். டேனியல், என்.ரவி, எஸ்.துரை, எம். கோவிந்தராஜ், எஸ்.கிருஷ்ணசாமி, டி.மனோகரன், எஸ். நடராஜ், இ. கருணாகரன், கே.ஜி.சங்கர், ஜி.செல்வநாயகம், ஜி.மைக்கேல், ஆர். கதிரேசன், எச்.மாரிமுத்து, பா.மணிகண்டன், கே. பிரேம்குமார், ஆர்.லெனின்குமார், டி.வெங்கடேசன், மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுச்சேரி ஆர்.வி.ஜானகிராமன்

ஜூன் 10 (2019)



இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்ற தொடங்கி, தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்த இவர், பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக புதுச்சேரி மாநிலக் கழக அமைப்பாளராக பொறுப்பு வகித்து, மாநிலத்தில் கழகம் வளர பாடுபட்டவர்.

ஐந்து முறை நெல்லித்தோப்புத் தொகுதியில் தொடர்ந்து வெற்றி பெற்ற இவர், பொதுப்பணித் துறை அமைச்சராகவும் – எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்தார். 1996ல் முதல்வராகி, மாநில முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்.

2005ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் “அண்ணா விருது” பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களையும் முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“எளிமைக்கு இலக்கணம் தேடினால் திரும்பிய பக்கமெல்லாம் தெரிகிற உருவம் புதுவை ஆர்.வி. ஜானகிராமன் தான்” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர். “புதுச்சேரி மாநிலத்தில் தொடர்ந்து இயக்கம் கம்பீரமாக நிற்கவும், திராவிட இயக்கத்தின் கொள்கை மாநிலத்தில் எங்கும் பரவவும் பாடுபட்டவர் – ஓடி ஓடி உழைத்தவர் திரு ஜானகிராமன்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

‘மா,செவும் ஒரு மந்திரிதான்னு அவங்களே சொல்லியிருக்காங்கள்ல,,,

# அமைச்சர், கலெக்டர், எஸ்.பி. வரிசையில் த.வெ.க. மாவட்டச் செயலாளரும் பங்கேற்பு!

## ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்ற அதிகாரிகள் அதிர்ச்சி!

திண்டுக்கல், ஜூன் 10-

திண்டுக்கலில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் துறைரீதியான அதிகாரிகள் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது,.

மாவட்ட ஆட்சித்தலைவர் துர்கா மூர்த்தி தலைமை வகித்தார். கூட்டமேடை யில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் விக்னேஷ், ஆட்சியர், மாவட்ட எஸ்பி, டிஆர்ஓ, மாவட்ட திட்ட அலுவலர் ஆகியோருக்கு இருக்கைகள் ஒதுக்கப்பட்டு இருந்தன.

இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு அமைச்சர் விக்னேன் மற்றும் தவெக கிழக்கு மாவட்ட செயலாளர் தர்மராஜ் ஆகியோர் வந்தனர். பின்னர் அமைச்சருடன் மேடைக்குச் சென்ற தர்ம ராஜ், அதிகாரிகளுக்கான இருக்கையில் அவர்களுடன் அமர்ந்து கொண்டார்.

**ஆறு எம்.எல்.ஏ.க்களுக்கு முறையான அழைப்பில்லை!**

மாவட்ட வளர்ச்சி குறித்த ஆய்வு கூட்டத்திற்கு மாவட்ட மக்கள் பிரதிநிதி களான எம்எல்ஏக் களுக்கு மாவட்ட நிர்வாகம் முறையான அழைப்பு விடுக்க வேண்டும். ஆனால் நேற்றைய கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்படாததால் முன்னாள் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, அர. சக்கரபாணி மற்றும் திண்டுக்கல் ஐ.பி.செந்தில் குமார் எம்.எல்.ஏ., வேடசந்தூர் எம்.எல்.ஏ. சுவாமிநாதன் உள்பட மாற்றுக் கட்சியினரும் இக்கூட்டத்தை புறக்கணித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

த.வெ.க மாவட்ட செயலாளர் ஆய்வு கூட்டத்தில் அதிகாரிகளில் ஒருவராக அமர்ந்து கொண்டதை பார்த்த அதிகாரிகளுக்கு என்ன சொல்வதென்று தெரியாமல் விழித்தனர். மேலும் அதிகாரிகளுக்கான கூட்டத்தில் த.வெ.க. நிர்வாகிகளும் கலந்து கொண்டது. அதிகாரிகள் மத்தியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது. மாவட்ட செயலாளரும் மந்திரிதான் என ஏற்கனவே த.வெ.க. மாவட்ட செயலாளர் ஒருவர் கூறியது இதைதானோ என்றுஅதிகாரிகள் முணுமுணுத்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கு. இராதாமணி

ஜூன் 10 (2019)



கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, திருமணம் செய்யாமலேயே கழகப் பணியாற்றியவர்.

கலிஞ்சிக்குப்பம் கிளைக் கழகச் செயலாளராக, பின்னர் ஆறு முறை கண்டமங்கலம் ஒன்றியக் கழகச் செயலாளராக – விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளராகவும் – விழுப்புரம் மத்திய மாவட்ட அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

விழுப்புரம் மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் – மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூடத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.